தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.4186/அ2/இ2/12 நாள் 21 .09.2012

-----

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை – திருமதி.டே.ஞானசெல்வி தட்டச்சர் - தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.71705/அ4/இ1/2009 நாள் 20.05.2011
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் 4186/அ2/இ2/12 நாள் 11.1.12.
3. அரசுத் தேர்வுகள் இயக்கக இடைநிலைக் கல்விச் சான்றின் உண்மைத்தன்மை அறிக்கை கடித ந.க.எண்.015163/வி5(8)/2012 நாள் 13.09.2012
4. அரசுத் தேர்வுகள் இயக்கக மேனிலைக்கல்வி சான்றின் உண்மைத் தன்மை அறிக்கை கடித ந.க.எண்.015144/VI(1)/2012 நாள். 05.07.2012
5. சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேடுகள் மற்றும் கோப்புகள்

-----

பார்வை–1ல் காண் செயல்முறைகளின்படி சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்ககத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் திருமதி.டே.ஞானசெல்வி என்பார் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 19.08.2011 முற்பகல் அன்று பணிவரன்முறை செய்யும் பொருட்டு அப்பணியாளர்களின் எஸ்.எஸ்.எல்.சி கல்விச் சான்றின் உண்மைத் தன்மையினை மற்றும் தட்டச்சு கல்வித்தகுதியின் உண்மைத் தன்மையினை பார்வை – 3 மற்றும் 4-ல் காண் கடிதம் வாயிலாக சான்றிதழ்கள் உண்மைத்தன்மை வாய்ந்தது என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவ்வுண்மைத் தன்மை அறிக்கையின் அடிப்படையிலும் கீழ்க்காண் நிபந்தனைகளின் அடிப்படையிலும் இப்பணியாளருக்கு தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளன்று கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண். | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | நியமன முறை | கல்வித் தகுதி | தட்டச்சர் பதவியில் நியமன நாள் | தட்டச்சர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 44 | டே.ஞானசெல்வி | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் | மேனிலை | 19.08.2011 முற்பகல் | 19.08.2011 முற்பகல் |

1. தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் கணினி கல்வித் தகுதியை ( Certificate course in Computer on “Office Automation” awarded by the Directorate of Technical Education) தவறாமல் நிறைவு செய்யப்பட வேண்டும்.
3. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன் முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
4. தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) 2/4

பெறுநர்
சம்பந்தப்பட்ட தட்டச்சர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை–6.

நகல் பணிப்பதிவேட்டிற்கு